**சர்வைவர் அலையன்ஸ் (மீண்டவர்களின் கூட்டணி)**

**** கீழே உள்ள வாக்கியங்களுக்கு, நீல நிறத்தில் உள்ள வார்த்தைகளை மட்டும் மொழிபெயர்த்து, கருப்பு நிறத்தில் உள்ள வார்த்தைகளை ஆங்கிலத்தில் விடுங்கள்**

-----

**பதிவு செய்வதற்கு முன் நீங்கள் யாரிடமாவது பேச விரும்பினால், கீழே ஆங்கிலத்தில் பட்டியலிடப்பட்டுள்ள அறிக்கைகளை எங்களுக்கு மின்னஞ்சல் செய்யவும். உங்களுடன் பேசுவதற்கு ஒரு மொழிபெயர்ப்பாளரைப் பெற வேண்டும் என்பதை இது எங்களுக்குத் தெரிவிக்கும்.**

**தலைப்பு: "சர்வைவர் அலையன்சில்" சேர விருப்பம்**

**செய்தி:**

**வணக்கம், எனது பெயர் [பெயரை உள்ளிடவும்] மற்றும் நான் யாரிடமாவது சர்வைவர் அலையன்ஸ் பற்றி பேச விரும்புகிறேன். நான் [மொழியை உள்ளிடவும்] மொழியைப் பேசுகிறேன்.**

**பின்வரும் தேதிகள் மற்றும் நேரங்களை என்னால் பேச முடிகிறது: [நீங்கள் பேசக்கூடிய தேதி மற்றும் நேரத்தை உள்ளிடவும். எங்களுக்கு 3 விருப்பங்களைக் கொடுங்கள். நீங்கள் எந்த நேர மண்டலத்தில் இருக்கிறீர்கள் என்பதை எங்களிடம் கூறுங்கள், நாங்கள் ஐக்கிய பேரரசு (UK) நேரத்தில் இருக்கிறோம் என்பதை நினைவில் கொள்ளவும்]**

-----

**** இங்கிருந்து, எல்லாவற்றையும் போலந்து மொழியில் மொழிபெயர்க்கவும்**

## பணி

உலகெங்கிலும் உள்ள அடிமைத்தனம் மற்றும் மனித கடத்தலில் இருந்து மீண்டவர்களை (சர்வைவர்ஸ்) ஒன்றிணைத்து மேம்படுத்துதல்.

## நாங்கள் யார் மற்றும் நாங்கள் என்ன செய்கிறோம் ?

- சர்வைவர் அலையன்ஸ் என்பது ஒரு தன்னார்வ தொண்டு நிறுவனம் ஆகும், இது உலகம் முழுவதும் அடிமைத்தனம் மற்றும் மனித கடத்தலில் இருந்து மீண்டவர்களை ஒன்றிணைத்து மேம்படுத்துகிறது.

- அடிமை ஒழிப்பு முயற்சியில் ஈடுபடக்கூடிய அல்லது ஈடுபட ஆர்வமுள்ள மீண்டவர் தலைவர்களின் உலகளாவிய வலையமைப்பை நாங்கள் உருவாக்குகிறோம்.

- உள்ளூர் மீண்டவர் வலைத்தளங்களை ஆதரிப்பதொடு, நகரம், மாநிலம் மற்றும் தேசிய எல்லையளவில் உள்ள வலைத்தளங்களை இணைப்போம்.

- சர்வைவர் அலையன்ஸ் 2019 மே ஜூன் மாதங்களில் இங்கிலாந்தில் உலக காங்கிரஸை நடத்தும். மீண்டவர்களுக்கான முதல் மாநாடு இதுவாகும்.

- அடிமைத்தனத்திற்கு எதிரான எந்தவொரு முயற்சியிலும் மீண்டவர்களின் குரல்கள் மையமாக இருப்பதை உறுதிசெய்ய நாங்கள் கூட்டாளிகளுடன் இணைந்து செயல்படுகிறோம். முடிந்தவரை மீண்டவர்களின் பங்களிப்பை நாங்கள் ஆதரிப்போம் மற்றும் எளிதாக்குவோம்.

- எந்தவொரு நாட்டிலும் வசிக்கும் அடிமைத்தனம் அல்லது மனித கடத்தலில் இருந்து மீண்டவர்கள் என சுயமாக அடையாளம் காணும் அனைத்து நபர்களுக்கும் உறுப்பினர் நிலை இலவசம்.

## உறுப்பினர் நிலை

### மீண்டவர் கூட்டணியில் அங்கத்தினர் ஆவதன் பயன் என்ன?

- மனித கடத்தல் மற்றும் அடிமைத்தனத்திலிருந்து மீண்டவர்களின் சர்வதேச, தொழில்முறை, வலையமைப்பில் பங்கு கொள்ளுதல்.

- உங்கள் விருப்பத்தின் பெயரில் உங்கள் கல்வி மற்றும் பணி வாழ்வின் தொகுப்பைப் பற்றி இலவச ஆலோசனையைப் பெறுதல்.

- மற்ற மீண்டவர் தலைவர்களுடன் தொடர்புகொள்ள இலவச இணைய சமூக வலைத்தளத்தின் அணுகலைப் பெற.

- எங்கள் மின்னஞ்சல் செய்திமடல் சேவையை தேர்ந்தெடுப்பதன் மூலம் நாங்கள் அனுப்பும் ஆலோசனை மற்றும் தலைமைத்துவ வாய்ப்புகளைப் பற்றி தெரிந்துகொள்ள.

- மீண்டவர்கள் மட்டும் கலந்துகொள்ளும் நிகழ்வுகளில் கலந்துகொள்ள.

- உறுப்பினர் அறிக்கையை நிலைநிறுத்தி, ஒருங்கிணைந்த சர்வதேச மீண்டவர் வலையமைப்பை உருவாக்க எங்களுக்கு உதவ.

**உறுப்பினர் அறிக்கை**

இந்த அறிக்கைகள் ஒவ்வொன்றையும் கவனமாய் வாசிக்கவும். எங்களுடன் இணைய விரும்பும் உறுப்பினர்கள் அனைவரும் இதை எங்கள் அடிப்படைக் கோட்பாடாக நிலைநாட்டுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**அடிமைத்தனமும் மனித கடத்தலும் பல வகையான ஒடுக்குமுறைகளின் ஒன்றிப்பே என்று நாங்கள் நம்புகிறோம்.** இதில் இனம், பாலினம், வருமான நிலை, சாதி, மதம், பாலியல், தேசியம், உடல் மற்றும் அறிவுசார் திறன் மற்றும் பலவும் அடங்கும். ஆப்பிரிக்க மக்கள் சட்டப்பூர்வமாகப் பிடிக்கப்பட்டு அடிமைப்படுத்தப்பட்டதன் விளைவுகள் இன்றும் உணரப்படுகின்றன என்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம். கறுப்பின மக்களுக்கு எதிரான மிகப்பெரும் முன்வெறுப்பு, வன்முறை மற்றும் கட்டமைப்பு ரீதியான இனவெறி உட்பட்ட அனைத்தையும், மற்றும் அதன் விளைவுகளையும் தீர்ப்பது முக்கியம் என்று நாங்கள் நம்புகிறோம்.

அடிமைத்தனம் மற்றும் கடத்தல் எதிர்ப்பு என்பது ஒடுக்குமுறை எதிர்ப்பே என்று நாங்கள் நம்புகிறோம்.
"கருப்பர்உயிரும்உயிரே" (#BlackLivesMatter), போன்ற முயற்ச்சிகள் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறையை எதிர்த்துப் போராடும் இயக்கங்கள், தொழிலாளர்களின் உரிமைகள், காலநிலை நீதி, "வின்ட்ரஷ் தலைமுறை"க்கான நீதி, நங்கை, நம்பி, ஈரர், திருனர் (ந,ந,ஈ,தி) உரிமைகள் ('எல்ஜிபிடிகுயு' சமூகம்), பழங்குடியினர் மற்றும் புலம்பெயர்ந்தோர் உரிமைகள், ஆவணமற்ற மக்களின் உரிமைகள், ஊனமுற்றோர் உரிமைகள் போன்ற பலவற்றை நாம் ஆதரிக்க வேண்டும்.

**நாங்கள் ஒருவருக்காய் மற்றொருவர் பேசுவதைவிட ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வதே சிறந்தது என்று நம்புகிறோம்.**
*நாங்கள் "குரலற்றவர்களுக்கான குரல்கள்" அல்ல. நம் ஒவ்வொருவருக்கும் ஒரு குரல் உள்ளது. சிலர் பொதுப் பேச்சு அல்லது எழுத்து மூலமாகவும், சிலர் சமூக நடவடிக்கை மூலமாகவும், மற்றவர்கள் கலை அல்லது புகைப்படம் எடுத்தல் போன்ற ஆக்கப்பூர்வமான வெளிப்பாடுகள் மூலமாகவும் தங்களை வெளிப்படுத்துகிறார்கள். சொந்த அனுபவத்திலிருந்து பேசும் நாங்கள் மற்றவர்களின் குரல் கேட்கப்பட அவர்களுக்கு வலுவூட்டுகிறோம்.*

**எங்கள் அனுபவங்கள் தனித்துவமானவை மற்றும் வேறுபட்டவை என்பதை நாங்கள் உணர்கிறோம்.**
*ஆட்கடத்தல் பற்றிய ஐக்கிய நாடுகளின் வரையறை விரிவானது என்பதையும், உயிர் பிழைத்த ஒவ்வொருவரின் அனுபவமும் மனித கடத்தலின் அனைத்து வடிவங்களையும் இயக்கவியலையும் பிரதிநிதித்துவப்படுத்த வாய்ப்பில்லை என்பதையும் நாங்கள் அங்கீகரிக்கிறோம். எனவே, எங்கள் அனுபவங்களில் உள்ள பன்முகத்தன்மையைப் பற்றி ஒருவருக்கொருவர் கற்பிப்பதற்கும், ஒவ்வொரு வாய்ப்பிலும் மிகவும் பொருத்தமான மீண்டவர்களை (சர்வைவர்) இணைப்பதற்கும் நாங்கள் ஒன்றிணைந்து முயற்சி செய்கிறோம்.*

**"நான்" என்பதில் உள்ள ஆற்றலை விட "நாம்" என்பதில் உள்ள ஆற்றல் பெரிது என்று நம்புகிறோம்.**
*இவ்வாறான பெரிய பன்முகப்பட்ட மீண்டவர் குழுவில் எப்போதும் ஒருமித்த கருத்துக்கள் எழுவதில்லை. எவ்வாறாயினும், ஒரு ஒருமித்த கருத்து எழும்போது, ஓர் ஒருங்கிணைந்த குரலில் சட்டமியற்றுவோர்க்கு அழுத்தம் தரவும், அநியாயத்திற்கு எதிராய் இணைந்து போரிடவும், வள வாய்ப்புகளை அணிதிரட்டவும் இன்னும் பலவிதங்களில் சிறப்பாய் இயங்கவும் முடிகிறது.*

**முதலில் நமது உடல் நலத்திற்கும், நலனுக்கும் முன்னுரிமை கொடுப்போம்.**
*முன்மாதிரித்துவ வழிநடத்துதலின் முக்கியத்துவத்தை நாங்கள் அங்கீகரிக்கிறோம். திறமையான தலைவர்களாகவும், ஆர்வலர்களாகவும், வழிகாட்டிகளாகவும் மற்றும் சமூக உறுப்பினர்களாகவும் இருப்பதற்கு, சொந்த உடல்நலத்திற்க்கும் நல்வாழ்வுக்கும் முன்னுரிமை கொடுப்பது அவசியம்.*

**பேரதிர்ச்சியின் விளைவுகளை நன்கறிந்த அணுகுமுறையை நாங்கள் ஊக்குவிக்கிறோம்.**
*அதிர்ச்சிகரமான நிகழ்வுகள் உலகம் முழுவதும் பொதுவானவை என்பதை நாங்கள் அறிகிறோம். எனவே, ஆட்கடத்தலில் இருந்து மீண்டவர்கள் மட்டுமன்றி, எந்தவொரு நபரும் அதிர்ச்சியால் நீண்டகால விளைவுகளை சந்திக்க நேரிடும் என்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம். எனவே, அனைத்து நிகழ்வுகளிலும், குறிப்பாக மனித கடத்தலில் இருந்து மீண்டவர் சம்பந்தப்பட்ட எந்தவொரு நிகழ்விலும், நாங்கள் 'அதிர்ச்சி நிகழ்வுகள் பற்றிய தகவலறிந்த' அணுகுமுறையை ஊக்குவிக்கிறோம்.*

**ஒற்றுமையை வளர்க்கவும் , பிரிவினைகளிலிருந்து பாதுகாக்கவும் முயல்கிறோம்.**
*இவ்வாறான பெரிய, பன்முகப்பட்ட மீண்டவர் குழுக்களில் தனிமனித பண்பியல்புகளும் கண்ணோட்டங்களும் மாறுபடவும், மோதல்கள் ஏற்படவும் வாய்ப்புகள் உள்ளன. எல்லாவற்றிற்கும் மேலாக, கடந்தகாலப் பாதிப்புகளில் பொதுவான அடித்தளத்தைக் கண்டு, மனித கடத்தலைத் தடுப்பது, பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பது மற்றும் உயிர்*

*பிழைத்தவர்களுக்கு அதிகாரம் அளிப்பது போன்ற இலக்குகளை நிர்ணயிப்போம். அனைவரும் ஒற்றுமையை ஊக்குவித்து பிரிவினையை எதிர்க்க வேண்டும் என எதிர்பார்க்கிறோம்.*

**சவால்களுக்கும் முரண்பாடுகளுக்குமிடையே கண்ணியமான முறையில் செயல்பட நாங்கள் உத்தரவளிக்கிறோம்.**
*கண்ணோட்டங்களில் உள்ள வேறுபாடுகள் இயல்பானவை, நன்மை பயக்குபவை என்று நாங்கள் நம்புகிறோம். எவ்வாறாயினும், சவால்களும் மற்றும் முரண்பாடுகள் எழும் போது, நாங்கள் துறைமைரீதியாக (புரொஃபஷனல்) பதிலளித்து, அவற்றை சட்டத்திற்கிணங்க கண்ணியமான முறையில் தீர்க்க முயற்சிப்போம். "நீயா - நானா என்று குற்றப்படுத்தும்" கலாச்சாரத்தை நாங்கள் ஊக்குவிக்கவில்லை. கருத்து வேறுபாடுகளைப் பற்றி நேரடியாகப் பேசுவதற்கு மீண்டவர்களை நாங்கள் ஊக்குவிக்கிறோம். ஒரு முரண்பாட்டைத் தீர்க்க முடியாவிட்டால், அனைத்துத் தரப்பினரும் துறைமைரீதியாகவும் சுமுகமாகவும் தொடர்ந்து நடந்து கொள்ள வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.*

**அடிமைத்தனம் மற்றும் ஆட்கடத்தலுக்கு எதிரான இயக்கத்தில் அனைவருக்கும் முக்கிய பங்கு உண்டு என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்**.
*மீண்டவர்கள் அனைவரும் அவர்கள் விரும்பினால், அடிமைத்தனம் மற்றும் கடத்தல் எதிர்ப்பு இயக்கத்தில் பங்கு வகிக்க முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். அவ்வாறு செயலாற்றுவதோ, பொது பார்வையில் இருப்பதோ கட்டாயம் இல்லை. மீண்டவர்கள் ஒவ்வொருவரும் ஒரு தனித்துவமான பயணத்தில் உள்ளவர், மேலும் அவர்கள் எவ்வாறு ஈடுபடலாம் என்பதையும் ஈடுபட வேண்டுமா என்பதையும் அவரவர்களே தீர்மானிப்பது அவசியம்.*

**உறுப்பினர் நிலைக்கான தேவைகள்**

- ✓ நான் அடிமைத்தனம் மற்றும்/அல்லது ஆட்கடத்தல் அனுபவத்திலிருந்து மீண்டவர் என்று என்னை சுயமாக அடையாளப்படுத்திக்கொள்கிறேன்.

***இணையதள இணைப்பு:***
[https://www.unodc.org/unodc/en/human-trafficking/what-is-human-trafficking.html?ref=menuside]
"*மனிதர்களை கடத்தல்*": என்பது அச்சுறுத்தல் அல்லது பலத்தின் பயன்பாடு அல்லது வற்புறுத்தல், கடத்தல், மோசடி, ஏமாற்றுதல், அதிகார துஷ்பிரயோகம் செய்தோ அல்லது பாதிக்கப்பட்ட ஒருவரின் நிலையை பயன்படுத்தியோ அல்லது பணப்பரிவர்த்தனை மூலமாகவோ வெகுமானம் செலுத்தியோ ஒருவரிடமிருந்து நியாயமற்ற முறையில் ஆதாயம் பெற்றுக்கொள்ளும் நோக்கத்தோடு அந்நபர் மீது அதிகாரம் கொண்டுள்ள ஒருவரின் சம்மதம் பெறுவது ஆகியவற்றின் மூலம் நபர்களை ஆட்சேர்ப்பு, இடம்பெயற்றல், இடமாற்றம், கையகப்படுத்துதல் அல்லது அவர்களை ஆதாயமாக்கிக்கொள்ளுதல் ஆகியவற்றைக் குறிக்கும்.

ஒருவரிடமிருந்து நியாயமற்ற முறையில் ஆதாயம் பெறுவது என்பது (சுரண்டல்/ தன்னலப்படுத்தல்), குறைந்தபட்சம், விபச்சாரத்திற்காக, அல்லது பிற பாலியல்ரீதியான ஆதாயம் பெற்றுக்கொள்வதற்காக, கட்டாய வேலை அல்லது சேவையில் ஈடுபடுத்த, அடிமைத்தனம் அல்லது அதற்கு நிகரான செயல்பாடுகள், சேவகம் செலுத்துதல், அல்லது மனித உறுப்புகளை அகற்றுவது போன்றவையாகும்.

*அடிமைத்தனம்*: "அடிமைத்தனமென்பது ஒருவரை உடைமையாக கொண்ட ஒருவர், அவரது உரிமையின் நிமித்தம் தான் கொண்டுள்ள ஏதாவது அல்லது எல்லா அதிகாரங்களையும் அந்த நபர் மீது அவரது விருப்பமோ அனுமதியோ இன்றி செலுத்தக்கூடும் நிலை அல்லது நிலைமைப்பேரு ஆகும்.

- ✓ நான் குறைந்தபட்சம் 18 வயது நிரம்பியவர்.
- ✓ நான் தனி நபராக இணைகிறேன், எந்த ஒரு அமைப்பின் பிரதிநிதியாகவோ அல்ல.
- ✓ எனது முதல் மற்றும் கடைசி பெயரையும் (முழு பெயரையும்) சரியான மின்னஞ்சல் முகவரியையும் பகிர்ந்து கொள்ள தயாராக உள்ளேன்.
- ✓ சர்வைவர் அலையன்ஸ் வீட்டுவசதி, சிகிச்சை அல்லது சட்ட உதவி போன்ற நேரடி சேவைகளை வழங்காது, ஆனால் பரிந்துரைகளை வழங்கும் என்பதை நான் புரிந்துகொள்கிறேன்.

**உறுப்பினர் சேர்க்கைக்கான கேள்விகள்**

சர்வைவர் அலையன்ஸில் சேர நீங்கள் காட்டும் ஆர்வத்திற்கு நன்றி! இந்தப் படிவத்தை நிரப்புவதற்கு முன், நீங்கள் எங்களுடன் பகிர்ந்துகொள்ளும் குறிப்பிடத்தக்க மற்றும் தனிப்பட்ட தகவல்களைப் பகிர்வதற்கான அனுமதியை நீங்கள் எங்களுக்கு வழங்காத வரையில் ரகசியமாக வைக்கப்படும் என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்று விரும்புகிறோம்.

இருப்பினும், தகவல்கள் சேகரிக்கப்பட்டு, "25% சர்வைவர் அலையன்ஸ் ஆலோசகர்கள் X நாட்டிலிருந்து வந்தவர்கள்" அல்லது "57% ஆலோசகர்கள் முக்கிய உரைகளை வழங்குகிறார்கள்" போன்ற அறிக்கைகள் மூலம் பெயர் அறிவிக்கப்படாமல் பொதுமக்களுடன் பகிரப்படும்.

உங்கள் முழுப் பெயர் ____________________ (தேவை)

உங்கள் மின்னஞ்சல் முகவரி _________________ (தேவை)

உங்கள் அனுபவத்தை விவரிக்க பின்வரும் வார்த்தைகளுள் மிகவும் பொருத்தமானது எவை? (தேவை) (பொருந்தும் அனைத்தையும் குறிக்கவும் )

- ☐ அடிமைத்தனம்

- ☐ ஆட்கடத்தல்
- ☐ கட்டாய உழைப்பாளி
- ☐ கொத்தடிமை
- ☐ வீட்டைசார்ந்த அடிமைத்தனம்
- ☐ குழந்தை சிப்பாய்
- ☐ கடன் கொத்தடிமை
- ☐ கட்டாய திருமணம்
- ☐ குழந்தைகளின் வணிகரீதியான பாலியல் அநீதி (CSEC)
- ☐ பாலியல் கடத்தல்
- ☐ கொத்தடிமை கடத்தல்

மற்றவை: ___________________________

நான் தற்போது அடிமைத்தனம்/கடத்தல் எதிர்ப்பு துறையில் பேசுதல், பயிற்சி அல்லது ஆலோசனை சேவைகளை வழங்கி வருகிறேன். (தேவை)

- ☐ ஆம்
- ☐ இல்லை
- ☐ இல்லை, ஆனால் நான் விரும்புகிறேன்

நீங்கள் எந்த நகரம் மற்றும்/அல்லது மாநிலத்தில் வசிக்கிறீர்கள்? (விரும்பினால்)

நீங்கள் எந்த நாட்டில் வசிக்கிறீர்கள்? (தேவை)

பொருந்தக்கூடிய ஒவ்வொரு உறுப்பினர் தேவையையும் டிக் செய்யவும் நீ. ( தேவை)

- ☐ நான் குறைந்தது 18 வயது நிரம்பியவர்.

- ☐ நான் மீண்டவர் கூட்டணியில் ஒரு தனி நபராக இணைகிறேன், எந்த ஒரு அமைப்பின் பிரதிநிதியாக அல்ல.

- ☐ உறுப்பினர் அறிக்கையை வாசித்துள்ளேன்.

- ☐ சர்வைவர் அலையன்ஸ் ஊழியர்கள் நான் உறுப்பினர் அறிக்கையின்படி நடக்கவில்லை என உணர்ந்தால், என் நடவடிக்கைகளை சரி பார்க்க ஒப்புக்கொள்கிறேன்.

- ☐ உறுப்பினர் அறிக்கையை மீறினால் எனது உறுப்பினர் அந்தஸ்தை இழக்க நேரிடும் என்பதை நான் புரிந்துகொள்கிறேன்.

எனது சுய தொகுப்பைப் (பயோ-டேட்டா) பற்றி இலவச ஆலோசனைப் பெற விரும்புகிறேன்.

- ☐ ஆம்
- ☐ இல்லை

எனது வேலைத் தொகுப்பு/கல்வி, தொழிற்பயிற்சி சுருக்கம், சி.வி (CV) பற்றிய இலவச ஆலோசனைப் பெற விரும்புகிறேன்.

- ☐ ஆம்
- ☐ இல்லை

சர்வைவர் அலையன்ஸின் சமீபத்திய மற்றும் சிறந்த மேம்படுத்தல்களுடன் மாதாந்திர செய்திமடலை அனுப்புவோம்.
அதன் உள்ளடக்கம்:
a) ஆலோசனை சேவைகள் மற்றும்/அல்லது துறைமைரீதியிலான மேம்பாட்டிற்கான வாய்ப்புகள் மற்றும்
b) அடிமைத்தனத்திற்கு எதிரான இயக்கத்தை பற்றிய தகவல் மற்றும் வள ஆதாரங்கள்.
இந்த செய்திமடலைப் பெற விரும்புகிறீர்களா? (தேவை)

- ☐ ஆம், தயவுசெய்து எனக்கு செய்திமடலை அனுப்பவும்!
- ☐ இல்லை, இந்த மாதாந்திர புதுப்பிப்பை நான் பெற விரும்பவில்லை

சர்வைவர் அலையன்ஸுக்கு உங்களைப் பரிந்துரைத்த நபர்/களின் பெயர்/கள் மற்றும் மின்னஞ்சல்/களை எங்களுக்கு தெரிவிக்கவும். கவனிக்கவும் – உங்களுக்காக பரிந்துரைக்க மற்றும் உங்களுக்காக உறுதியளிக்க ஒருவரைக் கோர நீங்கள் வழங்கிய மின்னஞ்சலுடன் நாங்கள் தொடர்பில் இருப்போம். நீங்கள் யாராலும் பரிந்துரைக்கப்படாவிடினும் நாங்கள் உங்களைச் சந்திக்க விரும்புகிறோம். எங்கள் சமூகத்தை பாதுகாப்பாக வைத்திருக்கவே இந்த தகவலை நாங்கள் வேண்டுகிறோம்.

- ☐ ................................................ .....................................

உங்களை உறுப்பினராகச் சேர்ப்பதற்கு முன் உங்களுடன் சுருக்கமாகவும் தோழமையுடனும் பேச விரும்புகிறோம். இதன் மூலம் நாங்கள் உங்களைப் பற்றி மேலும் அறிந்துகொள்ளவும், நாங்கள் என்ன வழங்குகிறோம் என்பதை நீங்கள் அறிந்திருப்பதை உறுதிசெய்யவும், உங்கள் பெயருக்கு ஒரு அடையாளத்தை பொருத்தவுமாகும். தயவுசெய்து உங்கள் நேர மண்டலத்தை எங்களுடன் பகிரவும் மற்றும் உங்களை ஜூம் (Zoom) வழியாக 30 நிமிடங்கள் சந்தித்து பேச உங்களுக்கு வசதியான சில நேரங்களையும் தேதிகளையும் பகிரவும். *

- ☐ ................................................ .....................................

நீங்கள் எந்தெந்த குழுக்கள் அல்லது நிறுவனங்களுடன் இணைந்திருக்கிறீர்கள் என்பதை எங்களிடம் கூறுங்கள். உங்களை பற்றின நேர்காணல்களின் இணைப்புகளை இணைத்து நீங்கள் ஒரு தலைவராக அல்லது மீண்டவராக செய்த பணிகளை எங்களிடம் பகிரலாம்.

- ☐ ................................................ .....................................

உங்களுக்கு எங்களிடம் கேட்க வேறு ஏதேனும் கேள்விகள் உள்ளதா?

___________________________________________